## இப்போதே ஒன்றிணைந்து
# கவனிப்போம் சிந்திப்போம் செயல்படுவோம்




### உலகம் வெறும் 0.5 டிகிரி செல்சியஸ் சூடேறினாலே பெரும் பிரச்சனையாகிவிடும்

தொழில்மயத்திற்கு முந்திய காலகட்டத்திலிருந்து இதுவரை உலகம் 1 டிகிரி செல்சியஸ் சூடேறியிருக்கிறது.

உலகின் சராசரி வெப்பநிலை மேலும் 0.5 டிகிரி செல்சியஸ் கூடினால் கடுமையான பின்விளைவுகள் நேரும் என ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் ஐபிசிசி அமைப்பு (IPCC) எச்சரித்திருக்கிறது. உலகம் அடுத்த 10 ஆண்டுகளில் உறுதியான நடவடிக்கை எடுக்கத் தவறினால் நமது சமூகங்களும், வாழ்க்கைகளும், வயிற்றுப்பிழைப்பும் பெரும் மிரட்டலுக்கு உள்ளாகும்.

## கவனிப்போம்

### வெப்பநிலை மேலும் 0.5 டிகிரி செல்சியஸ் அதிகரித்தால்...

கரையோர நகரங்கள், சிறிய தீவு தேசங்கள், தீவுக்கூட்ட நாடுகள் ஆகியன பருவநிலை சார்ந்த பேரிடர்களையும் உத்தேச அழிவு மிரட்டல்களையும் அதிகமாக எதிர்நோக்கக்கூடும்.

**கடல் நீர்மட்டம் உயர்வு**
துருவப் பனிக்கட்டிகள் உருகுவதால் சிங்கப்பூரின் கடல் நீர்மட்டம் **உலகின் சராசரியைவிட அதிகமாக** உயரக்கூடும்
(Kopp et al., 2017)

**கொசுக்களால் பரவும் நோய்கள்**
வெப்பநிலை அதிகரிப்பால் *ஏடிஸ் இஜிப்டாய்* கொசுக்களில் டெங்கி கிருமியின் அடைவுக்காலம் **12 நாட்களிலிருந்து 7 நாட்களாகக் குறைந்து**, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அபாயத்தைக் கூட்டும்
(Watts et al., 1987)

**வறட்சியின் பாதிப்பு**
ஆஸ்திரேலியாவிலும் ஆப்ரிக்காவிலும் அண்மையில் ஏற்பட்டதைப் போல, **மேலும் 350 மில்லியன்** நகர்வாழ் மக்கள் கடுமையான வறட்சியை எதிர்நோக்குவார்கள்

**இருப்பிடத்தைப் பறிகொடுக்கும் அபாயத்திலுள்ள உயிரினங்கள்**
சுமார் **6,000** தாவர வகைகள், **1,200** பூச்சி வகைகள், **500** முதுகெலும்புள்ள விலங்கினங்கள் தங்களது இருப்பிடங்களில் பாதிக்கும் அதிகமானவற்றைப் பறிகொடுக்கும் அபாயத்தைப் பெரிதும் எதிர்நோக்குகின்றன
(Warren et al., 2018a)

**பனிக்கட்டி இல்லாத வடதுருவம்**
பனிக்கட்டி இல்லாத வெயில் காலங்கள் ஏற்படுவதற்கு **50%-க்கு மேல்** சாத்தியமிருப்பதால், கடல் நீர்மட்டம் உயரும்



**மனிதரின் ஆரோக்கியம்**
ஐரோப்பா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளில் இவ்வாண்டு ஏற்கனவே நடப்பதைப் போல, **ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு பில்லியன்** மக்கள் கடுமையான அனல்காற்றால் அவதிப்படுவார்கள்

**பவளப்பாறை வெளிர்ப்பு**
மேலும் **70-90%** பவளப்பாறைகள் அழிந்து, உணவுப் பாதுகாப்புக்கும் வயிற்றுப்பிழைப்புக்கும் பேராபத்தை உண்டாக்கும்

ஆதாரம்: பருவநிலை மாற்றம் குறித்த அனைத்து அரசாங்கக் குழு, உலகின் 1.5 டிகிரி செல்சியஸ் சூடேற்றம் பற்றிய ஐபிசிசி *(IPCC)* சிறப்பு அறிக்கை, அக்டோபர் 2018.

## சிந்திப்போம்

### பருவநிலை பேரிடரைத் தடுப்பதற்கு உலகுக்கு வெறும் 10 ஆண்டுகளே உள்ளன

எதிர்வரும் 2030-ம் ஆண்டுக்குள் கரிமம் குறைவான எதிர்காலத்தை அடைந்திட நாம் வாழும் விதத்தையும், வேலை முறையையும், பொழுதுபோக்கும் வழிவகைகளையும் மாற்றியமைப்பது எப்படி?

- **50% குறைப்பு** — கரியமிலவாயு வெளியாக்கம்
- **15% குறைப்பு** — உலகின் எரிசக்தி பயன்பாடு
- **60% அதிகரிப்பு** — புதுப்பிக்கத்தக்க மின்சார மூலங்கள்

## செயல்படுவோம்

### நீடித்து நிலைக்கத்தக்க எதிர்காலத்திற்கான முதலீடு

உலகளாவிய நீடித்த நிலைத்தன்மை சவால்களுக்குத் தீர்வு காணும் நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை நாங்கள் தேடுகிறோம்.



**சஸ்டினிர்**
அறிவார்ந்த விவசாய முறையைப் பயன்படுத்தி சிங்கப்பூரில் ஸ்ட்ராபெர்ரிகளையும் பரட்டைக்கீரையையும் வளர்க்கிறது



**நியோஎன்**
அதன் அனைத்துலக சூரிய, காற்று, எரிசக்தி காப்பக வசதிகளின்வழி சுற்றுப்புறம் காக்கும் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது



**டெஸ்ஸா தெரபியூடிக்ஸ்**
எனும் சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட நிறுவனம் புற்றுநோய்க்காகப் புதுமையான உயிரணு சிகிச்சையை உருவாக்குகிறது




**வெரிலி**
நிறுவனத்தின் பூச்சி ஒழிப்புக் குழு சிங்கப்பூரிலும் உலகிலும் டெங்கியைப் பரப்பிவரும் கொசுக்களை ஒழிக்க பெருமுயற்சி எடுக்கிறது

### நமது பங்கைச் செய்திடுவோம்!

abc WORLD

விறுவிறுப்பான, உற்பத்தித்திறன்மிக்க பொருளியலும், அருமையான, அனைவரையும் உள்ளடக்கும் சமுதாயங்களும், தூய்மையான, குளுமையான பூமியும் கொண்ட ***ஏபிசி உலகை*** நிர்மாணிப்பதற்கு நாம் அனைவரும் இன்றே ஒன்றிணைந்து செயல்படுவது அவசியம்.

**குறைத்திடுக**
உணவுக் கழிவைக் கூடுமானவரை குறைத்திடுங்கள்
ஒற்றைப் பயன்பாட்டுப் பொருட்களைக் குறைவாகப் பயன்படுத்துங்கள்

**மறுபயனீடு செய்திடுக**
பொருட்களைப் பழுதுபாருங்கள், வர்த்தகம் செய்யுங்கள் அல்லது பகிர்ந்து கொள்ளுங்கள்
கலன்கள் மற்ற தேவைகளுக்குப் பயன்படுத்துங்கள்

**மறுசுழற்சி செய்திடுக**
மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களைத் தனியாகப் பிரித்து வையுங்கள்
பயன்படுத்தப்பட்ட சாதனங்களை நன்கொடையாக அளித்திடுங்கள்

+65 9101 0207 என்ற எண்ணுக்கு "SUBSCRIBE" என அனுப்புங்கள்

# TEMASEK

## தெமாசெக் ஷாப்ஹவுஸ்
### சமூக நல்விளைவுக்கான ஆக்ககம்

### நம் சமூகத்திற்கு தெமாசெக் வழங்கும் அன்பளிப்பு

மாற்றத்தை உண்டாக்குவோர் சமூகத்திற்கும் சுற்றுப்புறத்திற்கும் நல்விளைவுகளை உண்டாக்கும் தீர்வுகளை வழங்குவதற்காக ஒத்துழைத்துச் செயல்படக்கூடிய மையம்




தெமாசெக் ஷாப்ஹவுஸ் பற்றிய மேல்விவரங்களுக்கு ஒளிவருடல் செய்யுங்கள்

பழமை பாதுகாப்பு கடைவீட்டில் அமைந்திருக்கும் தெமாசெக் ஷாப்ஹவுஸ், சமூக நிறுவனங்களிலும், நீடித்து நிலைக்கத்தக்க கொடை முறைகளிலும், மனமுவந்து வழங்கவும் பரிவு காட்டவும் ஊக்கமூட்டும் முயற்சிகளிலும் சாதனைகள் புரிய சிங்கப்பூரிலும் அதற்கு அப்பாலும் மக்களை ஒன்றுதிரட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது.

## சமூக முதலீட்டுக்கான கட்டளை

- மக்களை வளர்க்கிறோம்
- சமூகங்களை நிர்மாணிக்கிறோம்
- திறன்களை வளர்க்கிறோம்
- வாழ்க்கையைச் சீர்ப்படுத்துகிறோம்

தெமாசெக் ஃபவுண்டேஷன் மீள்திறனை வலுவாக்கி, வாழ்க்கையையும், குடும்பங்களையும், சமூகங்களையும் சீர்தூக்கி நிலைநிறுத்தி, கலந்துரையாடல் மூலம் வட்டார ஆற்றல்களை மேம்படுத்தி, நீடித்து நிலைக்கத்தக்க உலகுக்காக அறிவியலிலும் இயற்கையிலும் முன்னேற்றங்களைச் சாதிக்க முற்பட்டுள்ளது.

**TEMASEK FOUNDATION**
சிங்கப்பூரிலும் ஆசியாவிலும் **900,000 க்கும் மேலான மக்களின் வாழ்க்கையில்** நல்விளைவுகளை உண்டாக்கியுள்ளது

**சிங்கப்பூர் மனநல ஆய்வு**
சிங்கப்பூரின் மனநல நிலவரம் குறித்து நாடளாவிய ஆய்வு நடத்த மனநல மருத்துவமனைக்கு ஆதரவளிக்கிறது






**சுற்றுப்புறம் காக்கும் பொருட்கள்**
ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் பொருட்களுக்குப் பதிலாக மக்கக்கூடிய மாற்றுப் பொருட்களை உருவாக்க புதுப்பிக்கத்தக்க மூலங்கள் பயன்படுத்தப்படுகின்றன



**சிங்ஹெல்த் சுகாதாரப் பராமரிப்புத் திட்டம்**
இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலத்தில் 250 சுகாதாரப் பராமரிப்புத் துறை நிபுணர்களுக்குத் தாய், சேய் சுகாதாரத்தில் பயிற்சி அளிக்கிறது

**புற வன்கூடுகள் மூலமாக நடமாட்ட ஆற்றல் மேம்பாடு (iMove)**
நடமாட்ட ஆற்றலை மேம்படுத்துவதற்கு இயந்திரப் புற வன்கூடுகளைப் பயன்படுத்தக்கூடிய சாத்தியத்தையும் உத்தேச நன்மைகளையும் ஆராய்கிறது





**Project Silver Screen**
மூத்த குடிமக்கள் குறைவான கட்டணத்தில் தங்களது பார்வை, செவிப்புலன், வாய் சுகாதாரத்தைப் பரிசோதனை செய்துகொள்ள உதவுகிறது



**மரி கியூரி மற்றும் டா வின்சி இளநிலைத் திட்டங்கள்**
சிங்கப்பூரில் அடுத்த தலைமுறை இளம் விஞ்ஞானிகளை உருவாக்குகிறது

தெமாசெக் ஃபவுண்டேஷன் வாழ்க்கைக்கு எவ்வாறு துணை புரிந்து வளப்படுத்துகிறது என்பது பற்றி மேல்விவரம் அறிய ஒளிவருடல் செய்யுங்கள்

தெமாசெக் ஆய்வின் முக்கிய கூறுகள் 2019
31 மார்ச் 2019 நிலவரப்படி